No. of Printed Pages : 8

**5361**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக் கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் - 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5x1=5**

1. பல் + தீது என்பது ________ எனப் புணரும்.

(அ) பல்தீது (ஆ) பஃறீது (இ) பலதீது (ஈ) பற்றீது

2. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ________ குறிக்கும்.

(அ) பசு (ஆ) காளை (இ) கன்று (ஈ) செல்வம்

[ திருப்புக

3. கருமை + குழி என்பது __________ எனும் விதிகளின்படி புணரும்

(அ) ஆதி நீடல், தன்னொற்றிரட்டல்

(ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்

(இ) ஈறுபோதல், இனமிகல்

(ஈ) முன்னின்ற மெய்திரிதல், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

4. மருத நிலத்திற்குரிய தெய்வம் __________

(அ) திருமால் (ஆ) முருகன் (இ) இந்திரன் (ஈ) வருணன்

5. மண்ணாசை கருதி போருக்குச் செல்வது __________

(அ) வஞ்சித் திணை (ஆ) காஞ்சித் திணை

(இ) வானகத் திணை (ஈ) பொதுவியல் திணை

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. **5x1=5**

6. 'தாயொப்பப் பேசும் மகள்' என்பதில் உள்ள உவம உருபு __________.

7. வினா __________ எனப்படும்.

8. வெண்பாவின் ஓசை __________ ஆகும்.

9. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே __________ என்பர்.

10. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் __________ அணியாகும்.

## பகுதி - 3

**சுருக்கமாக** விடையளிக்க. **10x1=10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றனைச் சான்று தந்து விளக்குக.

12. கீழ்க்காணும் உருவகத்தை உவமையாக மாற்றுக.
**வாய்ப்பவளம்**

13. அந்தோ! அப்துல்கலாம் மறைந்தாரே! - எவ்வகைத் தொடர்?

14. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.
அம்பேத்கர், ஏழைகளுக்கு பொருள் பெறாமல்
வாதாடி நீதி பெற்று தந்தார்.

15. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
முத்தமிழ்

16. கீழ்க்காணும் அடிக்கோடிட்ட மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக
வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.

17. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.

18. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீட்டு எழுதுக.
மருத்துவம் பொறியியல் சட்டம் வேளாண்மை முதலியவை
தொழிற்கல்வித் துறைகளாம்

19. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
எண்ணெ வெல அதிகமாகி விட்டது.

20. கீழ்க்காணும் தொடரில் அடைப்புக் குறிக்குள் உள்ள வினைப் பகுதியை பொருத்தமான எச்சச் சொல்லாக்குக.
நன்றாகப் ________ (பசி) பின்னர் அளவுடன்
உண்ணுதல் வேண்டும்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் - 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** விடையளிக்க. **5x2=10**

21. ஆய்தக் குறுக்கமாவது யாது? விளக்குக.

22. மொழியின் வகைகள் யாவை?

23. அடுக்குத் தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடு யாது?

[ திருப்புக

24. வினை முற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்?

25. மரவேர் - சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

26. கருப்பொருள் என்பது யாது?

27. நெய்தல் திணைக்குரிய தொழில்களை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் - 50)

**குறிப்பு :** பகுதி 3 -இல் வினா எண் 35 -இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க. **2x5=10**

28. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல் - இதில் பயின்று
வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்க.

2x5=10

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்றினை விளக்குக.

32. 'குறட்டை ஒலி' கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி வரைக.

33. தொன்மைக்கால நிகழ்வுகளைக் கண்டறிவதற்குத் தடயங்கள் எவ்வாறு உதவுகின்றன?

## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

3+2=5

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே?

வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட். சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்?

(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.

67, 49, 100, 856

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க.

3+2=5

(அ) Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் **இரண்டனுக்கு** இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) No pain no gain

(2) Covet all lose all

(3) Prevention is better than cure

(4) Work is worship

[ திருப்புக

35. குறிப்பு: காது கேளாத மாணவர்களுக்கு மாற்று வினா. 5x1=5

பலர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள். சிலருக்கு நூல்களைப் படித்தாலே உறக்கம் வந்துவிடும். ஆனால், அந்த மாபெரும் தலைவரோ படிப்பதற்குத் தனக்கு நேரமில்லை, நேரமில்லை என்று எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். ஆனால், பாராளுமன்றத்தில் பேசும்போது அதிகமான மேற்கோள்களைப் பயன்படுத்திப் பேசுவார்.

படிப்பதற்கு நேரமில்லை என்று கூறும் நீங்கள் எப்படி இவ்வளவு மேற்கோள்கள் காட்டுகிறீர்கள்? என்று அவரிடம் மற்றையோர் கேட்டனர். அதற்கு அவர் திருடுகிறேன் என்றார். கேட்டவர்கள் புரியாமல் வியப்புடன் அவரை நோக்கினர்.

ஒரு நாள் உறங்குவதற்கு ஐந்து மணி நேரத்தை என் உதவியாளர் எனக்கு ஒதுக்கித் தந்தால் அதில், இரண்டு மணி நேரத்தைப் படிப்பதற்காகத் திருடுகிறேன் என்றார் அவர்.

காலத்தைப் பொன்போன்று போற்றியவர் அவர். நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராய்த் திகழ்ந்தார். அவர்தான் நமது முதன்மையமைச்சர் நேரு.

1. பலர் எதற்காக நூல்களைப் படிப்பார்கள்?
2. பாராளுமன்றத்தில் அவர் எவ்வாறு பேசினார்?
3. அவர் படிப்பதற்கு எவ்வாறு நேரம் ஒதுக்குகிறார்?
4. எது பொன் போன்றது?
5. படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட தலைவரின் பெயர் என்ன?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றனுக்கு** விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என்று எண்ணினார். ஒரு நாள் .....

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் **எட்டு** வரிகளுக்குக் **குறையாமல்** கவிதை ஒன்று எழுதுக.

மழை அல்லது பள்ளி

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக. 1x5=5

எளியநடை யில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிட வும் வேண்டும்

-பாரதிதாசன்

## பகுதி - 6

38. குழலி என்பவர் கீழே குறிப்பிட்டுள்ள தன் குடும்ப உறுப்பினருடன் 29.09.2015 அன்று சென்னையிலிருந்து புதுதில்லி செல்லும் தமிழ்நாடு விரைவு வண்டியில் முன்பதிவு செய்ய உள்ளார். (வண்டி எண் : 13177) 1x5=5

| பெயர் | வயது |
|---|---|
| குழலி (பெண்) | 62 |
| கார்குழலி (பெண்) | 35 |
| அகிலன் (ஆண்) | 32 |
| வானதி (பெண்) | 09 |

தேர்வர் தன்னை குழலியாக பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து மேற்காண் விவரங்களை உரிய இடத்தில் பூர்த்தி செய்க.

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க. 3+2=5

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்று விடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டுக்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?
2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்.
3. இத்தகைய சூழலில் வெளிப்பட வேண்டிய திறன் என்ன?

[ திருப்புக

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும்போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும் தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச் சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன் தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்று தடுமாறுகிறான்.

1. மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?
2. மதியழகன் படிக்க விரும்பும் துறையின் சிறப்புகளில் இரண்டைக் கூறுக.

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றனுக்கு** விடையளிக்க. **1x10=10**

(அ) நும் ஊருக்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) நீ கண்டுகளித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்குக்** குறிப்புகளைக் கொண்டு **ஒரு பக்க** அளவில் கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக. **1x10=10**

(அ) சாலையைப் பயன்படுத்தும் முறை - போக்குவரத்து விதிகள் - சட்டத்தை மதித்தல் - விபத்துகளைத் தடுத்தல் - உயிர்களைக் காத்தல்.

**அல்லது**

(ஆ) பாரதியார் இளமைப் பருவம் - விடுதலை வேட்கை - தேசியக் கவிஞர் - முன்னோடி புலவர் - சமுதாயத் தொண்டு - மொழிப்பற்று.

- o 0 o -